**O.S.No. 52/2018**

<u>வா.சா.1, திருமதி.கலைச்செல்வி</u>
நாள் : 04.08.2025 நேரம் : 12.00 PM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2, 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது உடன் பிறந்தவர்கள் மொத்தம் 2 சகோதரிகள் மற்றும் 2 சகோதரர்கள் என்றால் சரிதான். எனது தந்தையின் பெண் வாரிசுகளான எங்களுக்கு திருமணம் குறித்த காலத்தில் 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். பெண் வாரிசுகளுக்கு திருமணம் முடிக்கப்பட்ட பின்னர் தான் 2ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி திருமணம் செய்து கொள்ளும் வரை எனது தகப்பனாருடன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை எனது தகப்பனாருக்கு தான் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் சம்பாத்தியத்தை வைத்து தான் பெண் வாரிசுகளான எங்களுக்கு திருமணம் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது தந்தை மற்றும் எனது மற்றொரு சகோதரரின் சம்பாத்தியத்தை வைத்து தான் திருமணம் நடைபெற்றது. எனது தந்தை ஆசாரியாக பணி செய்தார். எனது திருமணம் நடைபெற்ற காலத்தில் எனது தந்தை வேலைக்கு செல்லவில்லை என்றாலும், 2ம் பிரதிவாதியின் சம்பளத்தை வைத்து தான் திருமணம் நடைபெற்றது என்றாலும் சரியல்ல, எனது தந்தை மற்றும் எனது மற்றொரு சகோதரரும் வேலைக்கு சென்றார்கள். 2ம் பிரதிவாதியின் சம்பாத்தியத்தை வைத்து தான் சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டது என்றால் எனது தந்தை, 2ம் பிரதிவாதி, மற்றொரு சகோதரர் ஆகியோர்களின் சம்பாத்தியத்தை வைத்து தான் கிரையம் பெறப்பட்டது. மேற்படி கிரைய சொத்துக்களை விற்று அதில் பெண் வாரிசுகளான எங்களுக்கு பங்கு கொடுக்கப்பட்டதா என்றால் சொத்துக்கள் கிரைய பாத்தியப்பட்டது அல்ல, பூர்வீக பாத்தியப்பட்டது. ஆனால் ஆண் வாரிசுகளுக்கு கொடுத்தது போல பெண் வாரிசுகளுக்கு பங்கு

கொடுக்கவில்லை. எனது தந்தை எனக்கு 09.12.2015 ம் தேதியிட்டு ஒரு இனாம் செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார், ஆனால் நான் பணம் கொடுத்து தான் எனக்கு மேற்படி சொத்தை எனது தந்தை எழுதி வைத்தார் என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி இனாம் செட்டில் மென்ட் தான், அது பி.வா.சா.ஆ.1 (இணைய வழி சான்றளிக்கப்பட்ட நகல்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எனது தந்தை என்னிடம் மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் பணம் பெற்று தான் எழுதி கொடுத்தார் என பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தந்தை சொத்து கிரைய ஆவண எண். 766/1988 மூலம் கிரைய பாத்தியம் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழக்கு மால் எழுதி கொடுப்பவரால் ஒன்றரை அடி போடப்பட்ட சந்து என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழக்கு மால் ஒன்றரை அடி சந்தை ஒட்டிதான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான், ஆனால் சந்து ஒரு அடி தான் இருக்கும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்திலும் எனக்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதி கொடுத்தது போல் 2ம் பிரதிவாதிக்கும் எனது தந்தையின் கிரையம் வாங்கிய 1988ம் வருட ஆவணத்தில் கண்ட சொத்தில் ஒரு பகுதியை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதே போல் மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது தந்தைக்கு பாகவிஸ்தீரணத்தின் போது கிடைத்த பங்கையும் 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் மேற்படி 2ம் பிரதிவாதி எனது தந்தையை மிரட்டி எழுதி வாங்கினார், அது சம்மந்தமாக முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் புகாரும் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 1,2 லக்க சொத்துக்கள் அடங்கியுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்படி 1,2 லக்க சொத்துக்கள் அடங்கியுள்ளது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கூறுவது போல வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா 1வது லக்க சொத்தை 2ம் பிரதிவாதி மிரட்டி வாங்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 2ம் பிரதிவாதி மேற்படி எனது தந்தையை மிரட்டி 1வது லக்க சொத்தை வாங்கியதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அது எனக்கு பிராது தாக்கல் செய்யும் போது தெரியாது. எனக்கு பிராது தாக்கல் செய்யும் போது மேற்படி விவரம் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா 1,2 லக்க சொத்துக்கு 2ம் பிரதிவாதி பெயரில் வரி ரசீது, மின் இணைப்பு, பட்டா, சிட்டா ஆகிய அனைத்தும் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் சட்ட காலத்திற்குள் செல்லத்தக்கது அல்ல என பரிகாரம் கோராததால் அந்த பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. எனது தந்தை வா.சா.ஆ.3 ஆவணத்தை 2ம் பிரதிவாதிக்கு அவர் குடும்பத்திற்காக உழைத்ததால் தான் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது தந்தை மனப்பூர்வமாக வா.சா.ஆ.3 ஆவணத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 3ம் லக்க சொத்தை 3ம் பிரதிவாதிக்கு எனது தந்தை எழுதி கொடுத்ததை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான், ரத்து செய்துவிட்டு எனது தகப்பனார் பெயருக்கு மாற்றிவிட்டார். தாவா 3ம் லக்க சொத்தை எனது தந்தை 2ம் பிரதிவாதிக்கு 07.02.2011ல் வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் இனாம் செட்டில் மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், அது மோசடியாக பெறப்பட்டது. நான் கூறுவது போல மோசடியாக எழுதி கொடுத்தது என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்துக்கும் வருவாய் ஆவணங்கள் 2ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக மேற்படி விவரம் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின் படி தாவா சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியின் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி, தனது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை இனாம் செட்டில்

மென்ட் ஆவணத்தின் மூலம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தை ரத்து செய்யக்கோரி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் எனக்கு அந்த பத்திரம் பற்றி தெரியாததால் தான் நான் கேட்கவில்லை. மேற்படி 2ம் பிரதிவாதி, தனது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து எழுதி கொடுத்த இனாம் செட்டில் மென்ட் ஆவணம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்துதான், 1,3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து எனது தந்தை கையெழுத்துதான என எனக்கு சரியாக தெரியவில்லை. 1,3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்து இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. 5ம் பிரதிவாதியின் பெயரில் தான் தற்போது தாவா சொத்துக்களுக்கு வருவாய்துறை ஆவணங்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எல்லா தகவல்களும் தெரிந்து தான் தெரியாது என பிரதிவாதியை அழைக்களிப்பதற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை காங்கிரஸ் கட்சியின் அவைத் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை எந்த காலத்திலும் ஆசாரி வேலை செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1,3,4 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையோ, ஆவணங்களையோ இந்த 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு தற்போது எவ்வளவு மதிப்பிருக்கும் என்று எனக்கு தெரியாது. நான் தாவா சொத்துக்களுக்கு 3ம் தரப்பினரை வைத்து மதிப்பிட்டது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படாததால் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. 2016ம் ஆண்டு எனது சகோதரியான பெத்தம்மாளுக்கு எனது தந்தை அவரது சொத்தை விற்று கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது

தந்தை 19.10.2015 ம் ஆண்டு 3 ம் பிரதிவாதி சண்முகத்திற்கு இனாம் செட்டில் மென்ட் ஆவணம் அவரின் பாகத்திற்காக கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்தே வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 7/1 ஏ 1 க்கு நான் பங்கு கேட்கவில்லை என்றால் சரிதான். அது வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்ததால் பங்கு கேட்கவில்லை. அதேபோல் தாவா சொத்துக்கும் கிரையம் கொடுத்ததால் நான் பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண். 7/1 ஏ 1 ஐ வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்ததால் எப்படி பங்கு கேட்க முடியாதோ, அதேபோல் தாவா சொத்துக்களை 2 ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் எழுதி வைத்துவிட்டதால் பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் பெரியோர்களை வைத்து 2 ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை பங்கு கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் எந்த பங்கோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு 2,5 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.00 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.08.04 13:27:32 +0530